




We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## மார்ச் - 2020

We Are Here..!! To Guide You..!!






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## மார்ச் - 02.03.2020

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்








We Shine Academy

## தமிழக நிகழ்வுகள்

- பல்வேறு துறைகளின் **மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்துக்காக தமிழக சட்டப்பேரவை ஏப்ரல் 9-ம் தேதி வரை நடைபெறும்** என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
    - 2020-2021 நிதியாண்டுக்கான தமிழக பட்ஜெட் கடந்த 14ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டது. அதைத்தொடர்ந்து 17ஆம் தேதி மீண்டும் தொடங்கிய பட்ஜெட் கூட்டத்தொடர் 20ஆம் தேதி, குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.
    - இதையடுத்து பட்ஜெட் கூட்டத்தொடரின் 2ஆவது அமர்வு மார்ச் 9ஆம் தேதி தொடங்க உள்ளதாக சட்டப்பேரவை செயலர் சீனிவாசன் அறிவித்தார்.
    - **செய்தித் துளிகள்**
        - பட்ஜெட் மீதான விவாதம் கடந்த 17ம் தேதி முதல் 20ம் தேதி வரை 4 நாட்கள் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தொடரில்தான், காவிரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிப்பதற்கான சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

## இந்திய நிகழ்வுகள்

- **ஆர்மீனியாவுக்கு ரூ.288.70 கோடி** (சுமார் ரூ.40 மில்லியன் டாலர்) **மதிப்பிலான ஆயுதங்களைக் கண்டறியும் ரேடார்களை வழங்கும்**

We Shine Academy ™

**ஒப்பந்தத்தை இந்தியா பெற்றுள்ளது.** ரஷியா, போலந்து ஆகிய நாடுகளும் இந்த ஒப்பந்தத்துக்கான போட்டியில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

- இந்திய பாதுகாப்பு ஆய்வு மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் (டிஆர்டிஓ) மூலம் உருவாக்கப்பட்டு **'பெல்' நிறுவனம்** மூலம் தயாரிக்கப்படும் **'ஸ்வாதி'** என்ற பெயரிலான, ஆயுதங்களைக் கண்டறியும் ரேடார்களை ஆர்மீனிய நாட்டுக்கு விற்பனை செய்யும் ஒப்பந்தத்தை இந்தியா பெற்றுள்ளது.
- **செய்தித் துளிகள்**
  - ஜம்மு-காஷ்மீர் எல்லையில் இந்திய ராணுவம் இந்த ரேடார்களை ஏற்கெனவே பயன்படுத்தி வருகிறது.
  - முழுவதும் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு பாதுகாப்புத்துறை தளவாடத்துக்கு சர்வதேச அளவில் சந்தை திறந்துள்ளது புதிய வாய்ப்பாக அமைந்துள்ளது.

- **பிப்ரவரி மாதம் சரக்கு-சேவை வரி (ஜிஎஸ்டி) முறை மூலம் ரூ.1.05 லட்சம் கோடி வசூலாகியிருப்பதாக மத்திய அரசு** தெரிவித்தது. கடந்த மாதம் ஜிஎஸ்டியாக மொத்தம் ரூ.1,05,367 கோடி வசூலிக்கப்பட்டது.
  - இதில், மத்திய அரசின் ஜிஎஸ்டி (சிஜிஎஸ்டி) ரூ.20,569 கோடி, மாநில அரசின் ஜிஎஸ்டி (எஸ்ஜிஎஸ்டி) ரூ.27,348 கோடி, ஒருங்கிணைந்த ஜிஎஸ்டி (ஐஜிஎஸ்டி) ரூ.48,503 கோடி, செஸ் வரி ரூ.8,947 கோடி ஆகியவை அடங்கும்.
  - **செய்தித் துளிகள்**

- கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் வசூலான ஜிஎஸ்டி தொகையைக் காட்டிலும் இது 8 சதவீதம் அதிகமாகும்.
- அதே நேரம் கடந்த மாத ஜிஎஸ்டி வசூலை (ரூ.1.10 லட்சம் கோடி) காட்டிலும் இது குறைவாகும்.

## முக்கிய தினங்கள்

- உலகம் முழுவதும் **மார்ச் 03ஆம் தேதி வனவிலங்குகள் தினம்** கொண்டாடப்பட்டு வருகிறது. அழிந்துவரும் வன விலங்குகளைக் காப்பதற்காகவும், இயற்கைச் சமநிலை மாறுபடாதிருக்க விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவும் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.
    - 68வது ஐ.நா பொதுச் சபை கூட்டத்தில் கடந்த டிசம்பர் 20ஆம் தேதி அரிய வனவிலங்குகளின் சர்வதேச வர்த்தக சாசனத்தில் அதிகாரப்பூர்வமாக ஒப்பந்தம் செய்யப்பட்டதையடுத்து, இந்த தினத்தை "உலக வனவிலங்கு" தினமாக ஐ.நா அறிவித்தது

- ஒவ்வொரு ஆண்டும் **மார்ச் 3 ஆம் தேதி உலக செவிப்புலன் நாள்** அனுசரிக்கப்படுகிறது .
    - காது கேளாமை மற்றும் காது கேளாமை எவ்வாறு தடுப்பது மற்றும் உலகெங்கிலும் காது மற்றும் செவிப்புலன் பராமரிப்பை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 3 ஆம்

தேதி உலக செவிப்புலன் தினம் நடத்தப்படுகிறது.

## திருக்குறள்

**குறள்: 125**

குறள் பால்: அறத்துப்பால்

குறள் இயல்: இல்லறவியல்

குறள் அதிகாரம: அடக்கம் உடைமை

**எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**

**செல்வர்க்கே செல்வம் தகைத்து**

**விளக்கம்:** பணிவு என்னும் பண்பு, எல்லார்க்கும் நலம் பயக்கும் ஏற்கனவே செல்வர்களாக இருப்பவர்களுக்கு அந்தப் பண்பு, மேலும் ஒரு செல்வமாகும்.

We Shine Academy™